17. மாணவ, மாணவியர்களை கேலி (ராக்கிங்) செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறும் மாணவர்கள் அரசு ஆணைப்படி தண்டிக்கப்படுவார்கள்.

**மாணவர்களின் சேர்க்கைக்கான கலந்தாய்வின் பொழுது சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்கள்:**

1. மேனிலைப்பள்ளி அசல் மதிப்பெண் பட்டியல் அல்லது தகுதியுடைய தேர்வுச் சான்றிதழ்.
2. கடைசியாகப் படித்த கல்வி நிறுவனம் வழங்கிய அசல் மாற்றுச் சான்றிதழ் மற்றும் நடத்தைச் சான்றிதழ்.
3. பட்டியல் இனத்தவர் (SC), பட்டியல் இனத்தவர் அருந்ததியர் (SCA), பழங்குடியினர் (ST), மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தவர் (MBC)/ சீர் மரபினர் (DNC), பிற்படுத்தப்பட்ட இனத்தவர் (BC), பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் இனத்தவர் (BC-M), ஆகியோர் அசல் சாதிச் சான்றிதழ்.
4. கடவுச்சீட்டு அளவிலான மூன்று புகைப்படங்கள்.
5. மேற்கண்ட சான்றிதழ்களின் மூன்று ஒளிப்படி நகல்கள் (ஜெராக்ஸ் காப்பி) சமர்ப்பிக்க வேண்டும்.
6. மாணவர்கள் சேர்க்கைக்குத் தேர்வு செய்ய பெற்றவர்கள் அசல் மாற்றுச்சான்றிதழைக் கட்டாயம் ஒப்படைக்க வேண்டும்.

(குறிப்பு: அசல் மாற்றுச்சான்றிதழ் திருப்பித் தரப்பட மாட்டாது. எனவே தேவையான ஒளிப்படி (ஜெராக்ஸ்) நகல்களை முன்கூட்டியே எடுத்து வைத்துக்கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.)

18. கலந்தாய்விற்கு வரும் விண்ணப்பதாரர்கள் தங்களுடைய பெற்றோருடன் வரவேண்டும். பெற்றோர் இல்லையெனில் மட்டுமே பாதுகாப்பாளருடன் வரவேண்டும். இல்லாவிட்டால் காலந்தாய்விற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

19. கலந்தாய்வு முடிந்தபின் அன்றே பயிற்சிக் கட்டணத்தையும் மற்ற கட்டணங்களையும் கல்லூரி அலுவலகத்தில் செலுத்த வேண்டும். அவ்வாறு சரியான நேரத்தில் கட்டணம் செலுத்தத் தவறிய விண்ணப்பதாரர்களுக்கு அவர்களின் சேர்க்கை அனுமதி ரத்து செய்யப்படும்.

20. விடுதி வசதி உண்டு. விடுதிக் கட்டணம் தொடர்பான விபரங்களுக்குக் கல்லூரி முதல்வரை அணுகவும்.

21. மாணவர் சேர்க்கை பற்றிய விபரங்களை www.apcac.edu.in என்ற கல்லூரி இணையதளத்தில் பார்த்துக்கொள்ளவும்.

22. மாணவர் சேர்க்கை விண்ணப்பப்படிவத்தை கல்லூரி இணையதளத்தில் பூர்த்தி செய்து பின்னர் பதிவிறக்கம் செய்து உரிய இணைப்புகளுடன் விண்ணப்பப் படிவக் கட்டணமாக ரூ.50/- "The Principal, Arulmigu Palaniandavar College of Arts and Culture", Payable at Palani" என்ற முகவரிக்கு வங்கி வரைவோலையாகவோ அல்லது கல்லூரி அலுவலகத்தில் நேரிலோ செலுத்தி விண்ணப்பிக்கலாம்.

23. அரசு உதவி பெறும் பாடப்பிரிவுகள் 2019–2020 ம் கல்வியாண்டு முதல் சுழற்சி முறையில் (Shift System) வகுப்புகள் நடைபெறஉள்ளது. அரசு உதவி பெறும் பாடப்பிரிவுகள் நடைபெறும் நேரம் காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை.

***கட்டண அட்டவணை:**

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பப் படிவம், தகவல் தொகுப்பு, நேரில் பெறும்போது | 48.00 |
| 2. | பதிவுக் கட்டணம் | 2.00 |
| | பதிவு அஞ்சல் வழியாக | 80.00 |

3. ஆய்வுக்கூடக் கட்டணம் (ஓர் ஆண்டிற்கு)

| இளம் அறிவியல் முதன்மைப்பாடம் | (Major) | துணைப்பாடம் (Ancillary) |
|---|---|---|
| இயற்பியல் | 150.00 | 75.00 |
| வேதியியல் | 200.00 | 75.00 |
| தாவரவியல் | 150.00 | 75.00 |
| விலங்கியல் | 150.00 | 75.00 |

| | | |
|---|---|---|
| 4. | சிறப்புக் கட்டணம் (ஓர் ஆண்டிற்கு) | 325.00 |
| 5. | பல்கலைக்கழக நுழைவுக் கட்டணம் & அங்கிகாரக் கட்டணம் | 310.00 |
| 6. | மேல்நிலை மதிப்பெண் சரிபார்ப்புக் கட்டணம் | 50.00 |
| 7. | பட்டமளிப்பு விழா நிகழ்விற்கு | 25.00 |
| 8. | மாணவர் அடையாள அட்டை | 50.00 |

(* மேற்கண்ட கட்டணங்கள் மாற்றத்திற்கு உட்பட்டது.)

# அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி,


(தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் மறுமதிப்பீட்டில் 'A' தரம் பெற்றது)
(தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் உள்ள பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகத்தால் நடத்தப்படும் கல்வி நிறுவனம்)
(அரசு உதவி பெறும் கல்லூரி - மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவிப்பு பெற்றது)

**பழனி – 624 601.**

திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாடு.
Web:www.apcac.edu.in
E-mail:apacac_men@yahoo.co.in
✆ (0) 04545 - 251288, (P) 251930 / Fax : 04545 - 251375.




# தகவல் தொகுப்பு
# PROSPECTUS

**இளங்கலை (பி.ஏ.,)**
**இளம் அறிவியல் (பி.எஸ்ஸி.,)**
**இளம் வணிகவியல் (பி.காம்.,)**

**2019 - 2020**

அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துடன் இணைவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட, தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் மறுமதிப்பீட்டில் 'A' தரம் பெற்ற அரசு உதவிபெறும் கல்லூரி.

தமிழக அரசு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் ஆட்சிக்குழுவின் தலைவராகவும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் இணை ஆணையர் / செயல் அலுவலர் அவர்கள் இக்கல்லூரியின் தாளாளராகவும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் துணை ஆணையர் இக்கல்லூரியின் செயலராகவும் செயல்படுகின்றனர்.

பழனி முருகன் அருளால் இக்கல்லூரியில் கற்பிக்கும் கல்வி மற்றும் கல்விசாரா செயல்பாடுகள் அனைத்திலும் வெற்றி பெற்று மாணவர் சிறப்படைகின்றனர்.

**அரசு உதவிபெறும் பாடப்பிரிவுகள்**
**(AIDED UNDER GRADUATE DEGREE COURSES)**

B.A., and B.Sc., PART I TAMIL
B.A., B.Sc., and B.Com., PART II ENGLISH

**Degree Course**

## ARTS COURSES:

B.A., TAMIL LITERATURE

B.A., ENGLISH LITERATURE

B.A., HISTORY

B.A., ECONOMICS

B.A., INDIAN CULTURE

## SCIENCE COURSES:

**B.Sc., MATHEMATICS**
(Ancillary: PHYSICS, APPLN. OF MATHEMATICS)

**B.Sc., PHYSICS**
(Ancillary: MATHEMATICS, CHEMISTRY)

**B.Sc., CHEMISTRY**
(Ancillary: PHYSICS / MATHEMATICS / ZOOLOGY)

**B.Sc., BOTANY**
(Ancillary: CHEMISTRY, ZOOLOGY)

**B.Sc., ZOOLOGY**
(Ancillary: CHEMISTRY, BOTANY)

## COMMERCE COURSE

B.Com. COMMERCE

**விண்ணப்பதாரர்கள் செயல்பட வேண்டிய முறைகள்:**

1. சேர்க்கைக்கான விண்ணப்பங்களை விண்ணப்பதாரர்களே பூர்த்தி செய்ய வேண்டும்.
2. ஒரு விண்ணப்பத்தின் மூலம் அனைத்து பாடபிரிவுகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.
3. கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம் (பாஸ்போர்ட் சைஸ்) ஒன்று விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டும்.
4. மேல்நிலைப் பள்ளிச்சான்றிதழ்களில் குறிப்பிட்டுள்ளவாறு பிறந்த தேதியைக் குறிப்பிட வேண்டும்.
5. பட்டியல் இனத்தவர்கள் (SC), பட்டியல் இனத்தவர்கள் (அருந்ததியினர்)(SCA) / பழங்குடியினர்(ST), மிகவும் பிற்பட்ட வகுப்பினர் (MBC) / சீர்மரபினர் (DNC) / பிற்பட்ட வகுப்பினர் (BC), மற்றும் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் இனத்தவர் (BC-M),சேர்ந்த விண்ணப்பதாரர்களின் சாதிச் சான்றிதழ்கள் உரிய அரசு அதிகாரிகளால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
6. சரியான மதிப்பெண்களையே விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களில் குறிக்க வேண்டும். பரிசீலனைக்குப் பின் சரியான மதிப்பெண்கள் குறிக்கப்படவில்லை என்று தெரிய வந்தால்
   அ) விண்ணப்பதாரர் இக்கல்லூரியில் சேரும் தகுதியை இழப்பார்.
   ஆ) அடுத்த மூன்றாண்டுகளுக்கு அவர் படிக்க முடியாதபடி தடை செய்யப்படுவர்.
   இ) தவறான மதிப்பெண்களைக் குறிப்பிட்டதற்காக அவர்மீது சட்டப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
7. மாற்றுத்திறனாளிகள் மற்றும் தமிழ்நாட்டைச் சார்ந்த முன்னாள் இராணுவப் படை வீரர்களின் குழந்தைகள் விண்ணப்பத்தில் இந்த விவரத்தை அதற்குரிய இடத்தில் புள்ளி விவரங்களுடன் குறிக்க வேண்டும்.
8. சரியான விவரங்கள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படமாட்டாது.
9. நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மேல் நிலைப் பள்ளித் தேர்வுகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பத்து நாட்களுக்குள் கல்லூரி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். காலம் கடந்து வரும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.
10. கல்லூரிக் கல்வி இயக்குநரக வழிகாட்டுதலின்படி மாணவர்கள் சேர்க்கை நடைபெறும்.
11. 2008-2009ஆம் கல்வி ஆண்டுமுதல் CBCS அடிப்படையிலான பாடத்திட்டம் பின்பற்றப்படுகிறது.
12. பட்டியலின விண்ணப்பதாரர் அரசு விதிகளின்படி சாதிச்சான்றிதழ் மற்றும் +2 மதிப்பெண் சான்றிதழ் நகல் சமர்ப்பித்து ஒரு விண்ணப்பப்படிவம் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.
13. விண்ணப்பதாரரின் அதிகபட்ச வயது வரம்பு கல்வியாண்டில் ஜூலை 1ம் தேதியன்று 21 வயதுக்குள் இருக்க வேண்டும். BC, BC-M, MBC/DNC, SC, SCA, ST & Differently abled persons ஆகியோருக்கு அரசு விதிகளின்படி வயதுவரம்பில் சலுகை வழங்கப்படும்.
14. 2013-14 ஆம் கல்வியாண்டு முதல் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு ஒற்றைச் சாளரமுறைப்படி (SINGLE WINDOW SYSTEM) நடைபெற்று வருகிறது.
15. மாணவர்கள் சேர்க்கை தொடர்பான விபரங்களைக் கல்லூரி இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம்.
16. கல்லூரி சேர்க்கையில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் அதைக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லலாம்.